51

**கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**தமிழ்நாடு, சென்னை – 35.**
**முன்னிலை: திரு.க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப.**

செ.மு.ந.க.எண்.44516/2017/எம்1 0207 நாள்: 08.02.2023

| | | |
|---|---|---|
| பொருள்:– | பணியமைப்பு – கருவூலம் மற்றும் கணக்குத் துறை – சென்னை ஓரலகு – திருமதி.N.வனிதா, இளநிலை உதவியாளர் (பிணையம்), பொது முத்திரைத்தாள் அலுவலகம், சென்னை – பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வழங்கல் | |
| பார்வை:– | 1. | அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள்: 01.08.2018 |
| | 2. | அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்: 23.01.2020 |
| | 3. | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.17970/2018/எம்1 நாள்: 09.05.2018 |
| | 4. | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் கடித ந.க.எண்.44516/2017/எம்1 நாள்: 18.09.2019, 02.01.2020, 19.10.2020, 25.02.2021 மற்றும் 10.02.2022 |
| | 5. | அரசாணை (3ப) எண்.15, நிதி (க.க.2)த் துறை, நாள்.16.09.2022 |

********

**ஆணை:–**

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு.R.D.மோகன்பாபு அவர்கள் 14.02.2017 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மனைவியுமான திருமதி.N.வனிதா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கிடுமாறு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து, அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டு, தனியர் பொது முத்திரைத்தாள் அலுவலகம், சென்னையில்

10.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை 1-இல் காணும் அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள்.01.08.2018-ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை 3-இல் காணும் செயல்முறை ஆணையில், திருமதி.N.வனிதா (காலஞ்சென்ற திரு.R.D.மோகன்பாபு, இளநிலை உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை என்பவரின் மனைவி கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு-1 -இன்படி கருவூலம் மற்றும் கணக்குத் துறை சென்னை ஓரலகில் தற்காலிக இளநிலை உதவியாளர் ஆக பணிநியமனம் செய்யப்பட்டு, தனியர் சென்னை ஓரலகில் பொது முத்திரைத்தாள் அலுவலகம், சென்னையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக 10.05.2018 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருவதன்படி, கருவூலக் கணக்கு துறையில் சென்னை ஓரலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாக பணிபுரிந்து வரும் திருமதி.N.வனிதா என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.N.வனிதா, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 10.05.2018 முற்பகல் முதல் அவர் அப்பதவிற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு வரன்முறைப்படுத்தி பார்வை 5ல் காணும் அரசாணையில் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின் படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் எனவும் ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறவும் தகுதியுடையவராகிறார். மேலும் தனியரின் பணிவரன்முறை குறித்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் உரிய அலுவலர் அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒம்/- க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்:-
திருமதி.N.வனிதா,
இளநிலை உதவியாளர் (பிணையம்),
பொது முத்திரைத்தாள் அலுவலகம்,
சென்னை – 35
(உரிய வழிமுறையாக)

நகல்:-

1. உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், பொது முத்திரைத்தாள் அலுவலகம், சென்னை – 35
(தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது).
2. இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

முதுநிலை கண்காணிப்பாளர்

மே.கு.ந.க.எண்.44516/2017/எம்1

கருவூலக் கணக்கு ஆணையரகம்,
சென்னை-35
நாள்: 26.02.2023

27 FEB 2023
சென்னை-600 035

<u>அனுப்பலாகிறது</u>

அரசாணை (3ப) எண்.15, நிதி (க.க.2)த் துறை, நாள்.16.09.2022

0347

S.ஷோபா
கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)

**பெறுநர்:**
திருமதி.N.வனிதா, இளநிலை உதவியாளர் (பிணையம்),
பொது முத்திரைத்தாள் அலுவலகம்,
சென்னை
(உரிய வழிமுறையாக)

**நகல்:**

1. உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், பொது முத்திரைத்தாள் அலுவலகம், சென்னை.

   (தனியரின் பணிப்பதிவேடு மற்றும் பதிவுருத்தாள் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. அதனை பெற்று கொண்டமைக்கான ஒப்புகையினை தவறாது அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது)
2. இருப்புக் கோப்பு

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

முதுநிலை கண்காணிப்பாளர்

27/2/23

சுருக்கம்

பணியமைப்பு - கருவூலக் கணக்குத் துறை - திருமதி N. வனிதா இளநிலை உதவியாளர் பொது முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம், சென்னை - கருணை அடிப்படையில் 10.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

<u>நிதி (கருவூலக் கணக்கு-2)த் துறை</u>

அரசாணை (3டி) எண்.15 | நாள்: 16.09.2022.
சுபகிருது, ஆவணி - 31.
திருவள்ளுவர் ஆண்டு - 2053

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்) துறை, நாள் 01.08.2018.
2. சென்னை, கருவூல கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.17970/2018/M1, நாள். 09.05.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம)வே.வா.(க்யூ.1)த் துறை, நாள் 23.01.2020.
4. கருவூல கணக்கு ஆணையரின் கடித ந.க.எண்: 44516/2017/எம்1, நாள் 18.09.2019, 02.01.2020, 19.10.2020, 25.02.2021 மற்றும் 10.02.2022.

-----

<u>ஆணை:</u>

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலக (கிழக்கு)த்தில், இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு மோகன்பாபு என்பவர் 14.02.2017 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மனைவியுமான

தபியா

திருமதி N. வனிதா, என்பவர் கருணை அடிப்படையில் பொது முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், சென்னையில் பணியமர்த்தப்பட்டு, 10.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், தனியரின் குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்றும், இறந்த அரசு ஊழியரின் மனைவி மறுமணம் புரியவில்லை என்பதற்கான சான்றிதழினை அளித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான தகுதியை தனியர் பெற்றுள்ளார் என்றும், தெரிவித்து, பொது முத்திரைத்தாள் கண்காணிப்பாளர், சென்னையில் பணிநியமனம் பெற்ற திருமதி N. வனிதா, இளநிலை உதவியாளரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 10.05.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. மேலே, ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திருமதி N. வனிதா, (காலஞ்சென்ற திரு.R.D. மோகன்பாபு, இளநிலை உதவியாளர், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு) என்பவரின் மனைவி) கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)-ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், பொது முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம், சென்னையில் இளநிலை உதவியாளராக 10.05.2018 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார்.

Attested -

4. கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திருமதி N. வனிதா, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், அப்பதவிக்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர்

Assistant Superintendent of Stamps
Chennai - 600 035

பணி செய்துள்ளதாலும், திருமதி N. வனிதா, இளநிலை உதவியாளரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 10.05.2018 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதன் மூலம் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெற தகுதியுடையவராகிறார். மேற்கண்ட தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை கருவூலக் கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண். 15012/க்யூ-1/2022 நாள்.16.08.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.3034557/ஜி2/2022, நாள்.05.09.2022-ல் பெற்ற இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.முருகானந்தம்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

திருமதி N. வனிதா, இளநிலை உதவியாளர், பொது முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம், சென்னை. <u>(பணிப்பதிவேடு மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்கள்) (துறைத் தலைவர் வழியாக)</u>

கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை-35.

<u>நகல்</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை 9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

16/9/22

பிரிவு அலுவலர்

16/9/22